**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**<u>அசல் வழக்கு எண். 301/2019</u>**

பெயர் : சிவாஜிகணேசன் P.W.1.

த/பெ. : மாசிலாமணி

தேதி : 02.06.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u> –**

**1.** நான் பாகபிரிவினை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி எனது மூத்த சகோதரர் என்றாலும் 2ம் பிரதிவாதி எனது இளைய சகோதரர் என்றாலும், 3ம் பிரதிவாதி எனது சகோதரி என்றாலும் சரிதான். இந்த வழக்கு நிலுவையில் உள்ளபோது 1வது பிரதிவாதி இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவரது வாரிசுகளை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான்.

2. நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கின் 13 சர்வே எண்கள் தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்களில் 4 சர்வே எண்கள் நன்செய் நிலமாகும். மீதமுள்ள 9 சர்வே எண்கள் பொன்செய் நிலமாகும். நன்செய் சொத்துகள் மணல்மேடு கிராமத்தில் உள்ளது. பொன்செய் சொத்துகள் திருக்கடையூர் வட்டத்தில் உள்ளது.

3. தாவா சொத்துகள் அனைத்தும் எனது பெற்றோர் மற்றும் எங்களது உழைப்பை கொண்டு வாங்கப்பட்டதாக வழக்குரையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனது வழக்குரையில் பூர்வீக சொத்துகள் உள்ளதாக கூறியுள்ளேனா என்றால் இல்லை. கூட்டுகுடும்ப சொத்திலிருந்து வருமானம் கிடைத்ததாக எனது வழக்குரையில் கூறவில்லை என்றால் சரிதான்.

4. தாவா சொத்துகளை பொறுத்து எத்தனை ஆவணங்களை நான் தாக்கால் செய்துள்ளேன் என்றால் நஞ்சை நிலத்திற்கு 4 ஆவணங்களும் புஞ்சை நிலத்திற்கு 5 அல்லது 7 என்பது நினைவில் இல்லை. நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் எனது அண்ணன் பெயரில் உள்ள ஆவணங்கள் என்றால் இல்லை. எனது பெயரிலும் என் அம்மாவின் பெயரிலும் உள்ள ஆவணங்களையும் தாக்கல் செய்துள்ளேன். எனது பெயரிலும், எனது அம்மாவின் பெயரிலும் உள்ள சொத்து எந்த ஆண்டு வாங்கப்பட்டது என்றால் தற்போது நினைவில் இல்லை.

5. நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வாசாஆ 1 ஆனது 1974ம்

ஆண்டு ஆவணம் என்றால் தற்போது நினைவில் இல்லை. அதில் புஞ்சை சொத்துகள் 3 அயிட்டம் குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் கண்டுள்ள சொத்துகளானது முத்துலெட்சுமி என்பவரால் பாலகிருஷ்ணன் என்பவருக்கு கிரயம் கொடுக்கபட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் பாலகிருஷ்ணன் என்பவர் தான் முழு கிரயதொகையும் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனது அம்மாவிடமிருந்து தான் பணத்தை வாங்கி கொடுத்தார்.

6. நான் 1958 ம் ஆண்டு பிறந்தேன். தாவா சொத்தை நான் வாங்கும் போது 7ம் வகுப்பு அல்லது 8ம் வகுப்பு படித்துகொண்டிருந்தேன். வாசாஆ 1 ஆன ஆவணத்திற்குரிய பணத்தை எனது அம்மா கொடுத்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1976 ம் ஆண்டு எனது அண்ணன் பாலகிருஷ்ணன் பெயரில் சொத்துகள் வாங்கபட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சமயத்தில் எனது அண்ணன் கல்லூரியில் படித்துகொண்டிருந்தார். எனது அம்மா பெயரில் பத்திரத்தை வாங்கி விட்டு எனது அண்ணன் அவர் பெயரில் எழுதிக்கொண்டார். மேற்படி ஆவணத்தில் பாலகிருஷ்ணன் என்பவர் தான் முழு கிரயதொகையும் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனது அம்மாவிடமிருந்து தான் பணத்தை வாங்கி கொடுத்தார்.

7. வாசாஆ 3 ஆன ஆவணத்தில் 3 அயிட்ட நஞ்சை சொத்துகள் குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். 1977 ம் ஆண்டு எனது அண்ணன் பாலகிருஷ்ணன் பெயரில் சொத்துகள் வாங்கபட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் பாலகிருஷ்ணன் என்பவர் தான் முழு கிரயதொகையும் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனது அம்மாவிடமிருந்து தான் பணத்தை வாங்கி கொடுத்தார்.

8. வாசாஆ 4 ஆன ஆவணத்தில் 3 அயிட்ட நஞ்சை சொத்துகள் குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். 1978 ம் ஆண்டு எனது அண்ணன் பாலகிருஷ்ணன் பெயரில் சொத்துகள் வாங்கபட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் பாலகிருஷ்ணன் என்பவர் தான் முழு கிரயதொகையும் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனது அம்மாவிடமிருந்து தான் பணத்தை வாங்கி கொடுத்தார்.

9. வாசாஆ 5 ஆன ஆவணத்தில் 3 அயிட்ட புஞ்சை சொத்துகள் குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். 1987 ம் ஆண்டு எனது அண்ணன் பாலகிருஷ்ணன் பெயரில் சொத்துகள் வாங்கபட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி

ஆவணத்தில் பாலகிருஷ்ணன் என்பவர் தான் முழு கிரயதொகையும் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனது அம்மாவிடமிருந்து தான் பணத்தை வாங்கி கொடுத்தார்.

10. தாவா சொத்துகள் எனது பெற்றோரின் பணத்தை கொண்டு வாங்கபட்டது என வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நான் வழக்குரையில் மேற்படி தகவலை கூறவில்லை என்றாலும் கூறியுள்ளதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

11. எனக்கும் எனது அண்ணன் பாலகிருஷ்ணனுக்கும் எத்தனை வயது வித்தியாசம் என்றால் 5 வயது. எனது அண்ணன் 1995 ம் ஆண்டு குடும்பத்தை விட்டு வெளியேறினார். 1995 ஆண்டிற்கு முன்பு பாலகிருஷ்ணனுக்கு தனிபட்ட வருமானம் இருந்தது என்றால் இல்லை. தாவா சொத்திற்கான மூலபத்திரம் யாரிடம் உள்ளது என்றால் வங்கியில் அடமானத்தில் உள்ளது. மேற்படி பத்திரங்கள் அனைத்தும் எனது அண்ணன் பாலகிருஷ்ணன் பெயரில் தான் அடமானம் வைக்கபட்டுள்ளது என்றால் சரிதான். பாலகிருஷ்ணன் அவர்களின் தனிப்பட்ட சொத்து என்ற அடிப்படையில் தான் வங்கியில் அடமான வைத்துள்ளார் என்றால் சரியல்ல. அவர் அடமானம் வைத்த சொத்தை நாங்கள் தான் மீட்டு அசல் பத்திரத்தை வைத்துள்ளோம். அந்த அசல் பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும்.

12. நான் அடமானத்தை பைசல் செய்து அசல் பத்திரத்தை மீட்டு வைக்கவில்லை என்றாலும் மீட்டு வைத்துள்ளதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தை தவிர வேறு சொத்துகள் இந்த வழக்கில் சேர்க்கபடாமல் விடுபட்டுள்ளதா என்றால் விடுபட்டுள்ளது. அந்த சொத்துகள் யார் பெயரில் உள்ளது என்றால் எனது தாத்தா கோவிந்தசாமி பெயரிலும், அண்ணன் பாலகிருஷ்ணன் பெயரிலும் உள்ளது.

13. எனது அப்பா 2011 ம் ஆண்டும், எனது அம்மா 2005 ம் ஆண்டும் இறந்துவிட்டார்கள். எனது அப்பா இறந்த 5 வருடதத்திற்கு பிறகு தான் நான் பாகம் கேட்டேன் என்றால் சரியல்ல. எனது அப்பா உயிருடன் உள்ளபோதே பாகம் கேட்டேன் அவர் எனது தங்கைக்கு திருமணம் செய்து முடித்தபிறகு பிரித்து தருவதாக கூறினார். எனது தங்கைக்கு திருமணம் 1993, 1994 ம் ஆண்டில் நடந்தது. தாவா சொத்துகள் எனது அண்ணன் பாலகிருஷ்ணனின் தனிபட்ட சொத்துகள் என்றாலும் அதனால் எனக்கு பாகம் கிடைக்கக்கூடியது அல்ல என்றாலும் சரியல்ல.